## பேதுரு எழுதின பொதுவான

# முதலாம் நிருபம் (சகோ. ஜோஸ்)

**முன்னுரை:**

பேதுரு எழுதின முதலாம் நிருபம் புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஒன்றாவது புத்தகமாக அமைத்துள்ளது, அப்போஸ்தலனாகிய பேதுருவே இந்த நிருபத்தின் ஆசிரியராக இருக்கிறார் (1 பேது 1:1), பேதுரு புதிய ஏற்பாட்டில் நன்கு அறியப்பட்ட மனிதராக இருக்கிறார், என்பதோடு அவர் சபையின் மூப்பராகவும் இருந்தார் என்பதை இந்த நிருபத்தின் மூலமாய் அறிந்துக்கொள்கிறோம் ( 1 பேது 5:1).

**ஆசிரியர் பற்றி குறிப்பு:**

பேதுருவின் வாழ்க்கை பல நல்ல பாடங்களை நமக்கு கற்று தருகிறது, பேதுருவை பற்றி நாம் வாசிக்கையில் அவரில் நம்மை நம்மால் பார்க்க முடியும் அதாவது அவரை போலவே பல குணங்கள் உடையவர்களாய் நாம் இருக்கிறோம்.

பேதுரு இயேசுவை சந்திப்பதற்கு முன்பு அவர் ஒரு மீனவராய் இருந்தார் (மாற் 1:16), அவரின் உண்மையான பெயர் சீமோனாக இருந்தது, இவரின் தகப்பன் பெயர் யோனா (யோவா 1:42), இவருக்கு அந்திரேயா என்ற ஒரு சகோதரன் இருந்தார் (யோவா 1:40), பேதுருவும் யோவானும் தொழில் கூட்டாளிகளாய் இருந்தார்கள் (லூக் 5:10). பேதுரு பெத்சாயிதா என்னப்பட்ட பட்டணத்தை சேர்ந்தவனாயிருந்தான் (யோவா 1:44), பின்பு தொழில் காரணமாக கலிலேயா என்னப்பட்ட இடத்திற்கு வந்திருக்கலாம் (மாற் 1:28-31), பேதுரு திருமணமானவர் என்பதோடு அவருக்கு மாமியும் இருந்தார் (மாற் 1:29; 1 கொரி 9:5).

பேதுருவை முதல் முதலில் இயேசுவிடம் அழைந்துவந்தது, அவனுடைய சகோதரன் அந்திரேயா, அப்பொழுது தான் இயேசு சீமோனின் பெயரை பேதுரு என்று மாற்றினார். (யோவா1:40-42); இதற்கு பின்பு பேதுருவும் அவனுடைய கூட்டாளிகளும் வலைகளை அலசிக்கொண்டிருக்கும் போது இயேசுவின் போதகத்தையும், அவரின் செய்த அற்புதத்தையும் பார்த்து தன்னுடைய வலையை கீழே போட்டு இயேசுவிற்கு பின்னே சென்றான் (லூக்5:1-11). பின்பு பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டார் (மத் 10:1-5; லூக் 6:13-16). இயேசுவோடு நெருக்கிய சீஷராக மாறினார் (மத் 17:1-13; மாற் 14:37), பேதுரு சீஷனாய் இயேசுவை பின்பற்றின நாட்களில் இரண்டு முக்கியமான அறிக்கை செய்தார், பேதுரு இயேசுவை கிறிஸ்து என்றும் தேவனுடைய குமாரன் என்றும் அறிக்கை செய்தது குறிப்பிட தக்கது (மத் 16:16-18; யோவா 6:66-69).

பேதுரு மீனவராக இருப்பது, ஒருவேளை அவர் கடினமான நபராக இருப்பதை நமக்கு கூறலாம், பேதுரு நல்ல தலைவராக இருத்திருக்க வேண்டும். பேதுரு ஆர்வமான நபராக முந்தி பேசுபவராக இருந்தார், இதினால் இயேசுவிடம் இருந்து கடித்துக்கொள்ளுதலையும் பெற்றுக்கொண்டார் (மத் 16:22,23; யோவா 13:8-10), இயேசுவை மறுதலிக்க மாட்டேன் என கூறி மூன்று முறை மறுதலித்தார் (லூக் 22:33,34; 54-62). இயேசு உயிர்தெழுந்தார் என்ற செய்தி கேட்டவுடன் கல்லறையை பார்க்க பேதுருவும், யோவானும முதலில் சென்றனர் (லூக் 24:10-12; யோவா 20:1-9); இயேசு உயிர்தெழுந்த பின்பு சீஷர்கள் மீன்களை பிடித்துக்கொண்டிருந்த போது இயேசுவை கரையில் பார்த்து பேதுரு அவரை இயேசுவை அறிந்த பின்பு கடலில் குதித்து அவரை பார்க்க சென்றான் (யோவா 21:1-7), பேதுரு உணர்ச்சிவசப்படும் மனிதராகவே இருந்தார் (யோவா 21:15-17)

இயேசுவின் உயிர்தெழுதலுக்கு பின்பு நம்மால் புதிய பேதுருவை பார்க்க முடிகிறது. பேதுரு தன்னை தானே மாற்றிக்கொண்டார், தைரியமாய் சுவிசேஷத்தை பிரசிங்கித்தார் (அப் 2:13-42), புறஜாதியான மக்களுக்கு வசனத்தை பிரசங்கித்தார் (அப் 10:33-40); அதிகாரிகள் பயமுறுத்திய போதும் தைரியமாய் தேவனுடைய வசனத்திற்காக பேசினார் (அப் 4:19,20), பேதுரு தூணாக கருதப்பட்டார் (கலா 2:9). பேதுரு தன்னிடம் இருந்த குறைகளை மாற்றிக்கொண்டு தேவனுக்கு பிரியதான ஒரு நபராக மாறியது போலவே நாமும் நம்மை நாமே தேவனுக்கு உகந்த பாத்திரமாய் மாற்றிக்கொள்வது அவசியம்.

பேதுருவின் கடைசி காலம் பற்றி இயேசு சொன்னது போலவே அவருக்கு நடக்க போகிறது என்பதை பேதுரு அறிந்திருந்தார் (யோவா 21:18; 2 பேது 1:13-15), அப்போஸ்தலர் புத்தகத்தில் 15 -வது அதிகாரத்திற்கு பின்பு நம்மால் பேதுருவை பற்றி எந்த குறிப்பையும் பார்க்க முடியவில்லை. பேதுரு தன்னுடைய மனைவியுடன் கூட ஊழியத்தில் பயணம் செய்வதை குறித்து பவுல் கூறுவதை நம்மால் வாசிக்க முடிகிறது **“கேபாவும் செய்கிறது போல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கு அதிகாரமில்லையா?”( 1 கொரி 9:5),** பேதுரு தன்னுடைய நிருபத்தை சிறிய ஆசியா பகுதியில் உள்ள சபைக்கு எழுதுவதன் மூலமாய் அவர் அந்த பகுதியில் ஊழியம் செய்திருக்கலாம் என்பதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது ( 1பேது 1:1,2; 2 பேது 3:1) பேதுரு தன்னுடைய முதலாம் நிருபத்தை பாபிலோனில் வைத்து எழுதியிருக்கலாம் (1 பேது 5:12,13). பேதுரு ரோம அரசன் நீரோவினால் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார் என வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன.

**நோக்கம் மற்றும் மைய கருத்து:**

பேதுரு ஏன்? இந்த நிருபத்தை எழுதினார், என்கிற கேள்விக்கு பதிலை 1 பேதுரு 5:12 யில் நாம் படிக்கலாம் **“உங்களுக்குப் புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும்படிக்கும், நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி, எனக்குத் தோன்றுகிறபடி உண்மையுள்ள சகோதரனாகிய சில்வானுவின் கையிலே கொடுத்து அனுப்பியிருக்கிறேன்”**. அவர் இந்த நிருபத்தின் மூலமாய் புத்தி சொல்கிறார், ஒரு கிறிஸ்தவருக்கு பாடுகள், கஷ்டங்கள், உபத்திரவங்கள் சோதனைகள் இருக்கின்றன, அதை அந்த கிறிஸ்தவர், கிறிஸ்து சகித்தது போல சகித்து அதை கடந்து வர வேண்டும் என்பதையும் தேவனுடைய கிருபையில் நிலைத்திருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். கிருபை என்கிற வார்த்தை இந்த நிருபத்தில் 10 முறை வருகிறது. தேவனுடைய பிள்ளைகளால் நாம் தேவனுடைய கிருபையில் நிலைத்திருப்பது அவசியம். ( 1 பேது 1:13).

துன்பப்படுதல் என்கிற வார்த்தை ஏறக்குறைய 16 முறை இந்த நிருபத்தில் வருகிறது, கிறிஸ்தவர் துன்பப்படுவது அவசியம் எனவும் (1 பேது 1:6), நமக்கு வரும் துன்பங்களும், உபத்திரவங்களும் கொஞ்ச காலம் மாத்திரமே என்பதையும், சகல கிருபை பொருந்திய தேவனால் நாம் இந்த உபத்திரவங்களை ஜெயித்து, நிலைத்திருக்க முடியும் (1 பேது 5:10) என்பதை கூறுகிறார்.

இந்த நிருபம் சிறிய ஆசியாவில் இருந்த ஐந்து தேசங்களில் வாழ்த்துக்கொண்டிருந்த பரதேசிகளான தேவனுடைய பிள்ளைகளுக்கு எழுதப்பட்டது (1 பேது 1:2; 1 பேது 1 :17), இது இன்றும் பரதேசிகளாய் இருக்கிற கிறிஸ்தவர்களுக்கும் பொருத்தும் (1 பேது 1:2) பரதேசிகள் என்கிற வார்த்தை ஆபிரகாமுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்கு பயன்படுத்தப்பட்டது

(எபி11:9; எபி 11:13-16). அவர்களைப்போலவே நாமும் பரம தேசத்தை நாடுகிறோம், அதாவது நாம் இந்த பூமியில் இருந்தாலும் நம்முடைய தேசம் பரலோகம் தான் என்பதை பரதேசிகள் என்கிற வார்த்தை நமக்கு காண்பிக்கிறது. இந்த நிருபம் ரோம அரசன் நீரோவினால் வந்த உபத்திரவத்தின் போது எழுதப்பட்டிருக்கலாம் (கி.பி 64 - 67 ) பேதுரு நீரோவினால் தலைகீழாக சிலுவையில் அறியப்பட்டார் என வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன.

இந்த நிருபம் பேதுருவினால் எழுதப்பட்டு சில்வானால் அந்த சபைகளுக்கு கொடுக்கப்பட்டது (1 பேது 5:12; 2 கொரி 1:19, 1 தெச 1:1)

**புறக்குறிப்பு:**

**அதிகாரம் 1**

1. தேவனுடைய பிள்ளைகளின் மகா மேன்மையான விசுவாசம் (1:1-13)
2. பயத்திருக்க கடவோம் 1:14-25

**அதிகாரம் 2**

1. வாஞ்சையாயிருங்கள் (2:1-3)
2. தேவனுடைய ஜனங்கள் (2:4-10)
3. தேவனுடைய ஜனங்களின் கடமைகள் (2:11-25)

**அதிகாரம் 3**

1. கணவன் மனைவி மற்றும் கிறிஸ்தவர்களின் கடமைகள் (3:1-13)
2. நன்மை செய்து பாடநுவிப்பது, இயேசு நமக்கான முன்மாதிரி (3:14- 22)

**அதிகாரம் 4**

1. கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமும் தரித்துக்கொள்ள வேண்டும் 4:1-19

**அதிகாரம் 5**

1. மூப்பர்களுக்கும் வாலிபர்களுக்கும் 5:1-5
2. பிசாசு (5:6-9)
3. நிறைவான புத்தி மதி (5:10- 14)